بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# வெற்றி பெற்றோர் யார்?

இந்த உலகத்தில் வாழும் மக்களில் பெரும்பாலோர் அல்லாஹ்வை மறுத்தும் அவனுக்கு இணை வைத்தும் வாழ்ந்து வருகிறார்கள். மிகவும் சொற்ப நபர்களே அவனை நம்பிக்கை கொண்டு அவனது தூதருக்குக் கீழ்ப் படிந்து வருகிறார்கள். இந்தச் சொற்பக் கூட்டத்தைச் சார்ந்தவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்கியுள்ளான். அவனுக்கே புகழனைத்தும்!

இஸ்லாத்தின் சட்டங்களை மக்களுக்குக் கற்றுத் தந்த நபி (ஸல்) அவர்கள், சில காரியங்களைத் தங்கள் வாழ்நாளில் செய்தவர்களைக் குறித்து வெற்றியாளர்கள் என்று கூறியுள்ளார்கள். மறுமையில் வெற்றி பெறுவதற்கு அந்த முக்கியமான காரியங்களை நபிமொழிகளிலிருந்து தொகுத்துத் தருகிறோம். அக்காரியத்தைச் செயல் படுத்தி நாமும் வெற்றி பெற்றோராக மாறுவோம்.

## கடமையான காரியங்களைச் சரியாக நிறைவேற்றுவோர்

நஜ்த் என்ற ஊரைச் சார்ந்த ஒருவர் பரட்டைத் தலையாக நபி (ஸல்) அவர்களிடம் வந்தார். அவருடைய குரல் செவியில் ஒலித்தது. ஆனால் அவர் என்ன சொல்கிறார் என்பது புரியவில்லை. நபி (ஸல்) அவர்களின் அருகில் வந்ததும் இஸ்லாத்தைப் பற்றிக் கேட்டார். அப்போது நபி (ஸல்) அவர்கள், "இஸ்லாம் (என்பது) இரவிலும் பகலிலும் ஐவேளைத் தொழுகைகள்" என்றார்கள். உடனே அவர், "அத்தொழுகையைத் தவிர வேறு (தொழுகை) ஏதாவது என் மீது கடமை உண்டா?" என்று கேட்டார். அதற்கவர்கள், "நீ விரும்பிச் செய்தாலே ஒழிய வேறு எதுவும் இல்லை" என்றார்கள். "அடுத்து ரமலான் மாதம் நோன்பு நோற்பதுமாகும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். உடனே அவர் "அதைத் தவிர வேறு ஏதேனும் (நோன்பு) கடமையுண்டா?" என்றார். அதற்கவர்கள், "நீ விரும்பிச் செய்தாலே ஒழிய வேறு இல்லை" என்றார்கள். அவரிடம் நபி (ஸல்) அவர்கள் ஸகாத்தைப் பற்றியும் சொன்னார்கள். அதற்கவர், "அதைத் தவிர வேறு (ஸகாத்) ஏதும் என் மீது கடமையா?" என்றார். அதற்கவர்கள் "நீராக விரும்பிச் செய்தாலேத் தவிர வேறு தர்மங்கள் கடமையில்லை" என்றார்கள். உடனே அந்த மனிதர், "அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் இவற்றை விட கூட்டவும் மாட்டேன். குறைக்கவும் மாட்டேன்" என்று கூறியவாறு திரும்பிச் சென்று விட்டார். அப்போது, "இவர் கூறியதற்கேற்ப நடந்து கொண்டால் வெற்றியடைந்து விட்டார்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: தல்ஹா பின் உபைதுல்லாஹ் (ரலி), நூல்: புகாரீ 46

இந்த நபிமொழியின் இறுதியில், இவர் கூறியதற்கேற்ப நடந்து கொண்டால் வெற்றியடைந்து விட்டார் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதை நாம் ஆழ்ந்து நோக்க வேண்டும். குறைந்தபட்சம் கடமையான காரியங்களையாவது சரிவர நிறைவேற்ற வேண்டும். அதில் குறை வைத்தால் அவர் வெற்றியடைய முடியாது என்பதை இந்த ஹதீஸிலிருந்து விளங்கலாம்.

இது போன்றே மற்றோரு சம்பவமும் அபூதாவூதில் இடம் பெற்றுள்ளது.

ஒரு மனிதர் அல்லாஹ்வின் தூதரிடத்தில் வந்து, "அல்லாஹ்வின் தூதரே! எனக்கு (தொழுகையில் ஓதுவதற்கு ஏதேனும் சூராவை) கற்றுத் தாருங்கள்" என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "அலிஃப் லாம் ரா எனத்தொடங்கும் சூராக்களில் மூன்றை ஓதுவீராக" என்று கூறினார்கள். அதற்கு அவர், "நான் வயது முதிர்ந்தவனாக ஆகி விட்டேன். எனது உள்ளம் (அதை மனனம் செய்ய இயலாதவாறு) கடினமாகிவிட்டது. எனது நாவும் (ஓதுவதற்கு) கடினமாகி விட்டது" என்று கூறினார். அதற்கு நபியவர்கள் "ஹாமீம் என்று ஆரம்பமாகும் சூராக்களில் ஏதேனும் மூன்றை ஓது!" என்று கூறினார்கள். அதற்கு அவர் (முன்பு) கூறியதைப் போன்றே கூறினார். நபி (ஸல்) அவர்கள் "சப்பஹ அல்லது யுசப்பிஹு என்று ஆரம்பமாகும் சூராக்களில் ஏதேனும் மூன்றை ஓதுவீராக!" என்று கூறிய போதும் அவர் (முன்பு) கூறியதைப் போன்றே கூறினார். பிறகு அவர், "அல்லாஹ்வின் தூதரே! (அனைத்து விஷயங்களையும்) உள்ளடக்கிய ஒரு சூராவை எனக்கு கற்றுத் தாருங்கள் என்று கேட்டார். அவருக்கு நபி (ஸல்) அவர்கள், 'இதா ஸுல்ஸிலத்தில் அர்லு ஸில்ஸாஹா' என்ற சூராவை முழுமையாக ஓதிக் காண்பித்தார்கள். அம்மனிதர், "உண்மையுடன் உங்களை அனுப்பியவனின் மீது சத்தியமாக இதற்கு மேல் ஒரு போதும் நான் அதிகமாக்க மாட்டேன்" என்று கூறி விட்டு திரும்பிச் சென்று விட்டார். அதற்கு நபியவர்கள், "ருவைஜில் வெற்றி பெற்று விட்டார்" என்று இரு முறை கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி)
நூல்: அபூதாவூத் 1191, அஹ்மத் 6287

மார்க்கத்தின் கட்டளைகளைப் பின்பற்றுவதில் ருவைஜில் (ரலி) அவர்கள் எவ்வளவு ஆர்வப் பட்டார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். வயதான காலத்திலும் தொழுகையை நிறைவேற்றியவர்களாக இருந்த ருவைஜில் (ரலி) அவர்கள் தொழுகையில் அதிகம் ஓத முடியவில்லை என்பதற்காக அதை விட்டு விடாமல், அதை நிறைவேற்ற முயற்சி எடுத்ததும், நபி (ஸல்) அவர்கள் காட்டிய முறையை அப்படியே பின்பற்றுவேன் என்று கூறியதும் அவர்களை வெற்றியாளராக மாற்றியுள்ளது. எனவே நாமும் கடமையான காரியங்களை சரிவர நிறைவேற்றவும் அதைச் செயல்படுத்த ஆர்வமும் கொள்ள வேண்டும்..

## நபிவழியை மட்டும் பின்பற்றியவர்

"ஒவ்வொரு (நற்) செயலுக்கும் ஆர்வம் வேண்டும். (நற்காரியங்களில் கொள்ளும்) அனைத்து ஆர்வத்திற்கும் ஒரு வரையறை உள்ளது. யாருடைய வரையறை எனது வழிமுறையைச் சார்ந்ததாக உள்ளதோ அவர் வெற்றி பெற்று விட்டார். எவருடைய வரையறை மற்றதைச் சார்ந்ததாக இருக்கின்றதோ அவர் அழிந்து விட்டார்" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி), நூல்: அஹ்மத் (6664)

இஸ்லாத்தின் வழிமுறையைத் தெளிவாகக் கூறும் நபிமொழி இது! மார்க்கத்தின் பெயரால் எத்தனை அனாச்சாரங்கள் நடக்கிறதோ அவை அனைத்தையும் கடுமையாகக் கண்டிக்கும் நபிமொழி.

இன்று இஸ்லாமியர்கள் முதன்மையாகக் கடைப்பிடிக்க வேண்டிய தொழுகை என்ற அமல் நபி (ஸல்) அவர்கள் காட்டித் தந்த முறைப்படி நடைபெறுகிறதா? ஊருக்கு ஊர், தெருவுக்குத் தெரு வித்தியாசப்படுவதைக் கண்கூடாக நாம் பார்க்கிறோம். இதற்கு என்ன காரணம்? நபி (ஸல்) அவர்கள் காட்டித் தந்த வழிமுறையை விட்டு விட்டு முன்னோர்கள் சொன்னது, பழக்கத்தில் உள்ளது என்று கூறி அவற்றை பின்பற்றுவது தான். இவ்வாறு பின்பற்றுபவர்கள்

வெற்றியாளர்களா? என்பதை மேற்கூறிய நபிமொழியைக் கவனித்து முடிவு செய்யுங்கள்!

## இஸ்லாத்தை ஏற்ற பின்னர் அதில் உறுதியாக இருப்பது

இது மிக முக்கியமான ஒன்றாகும். இஸ்லாத்தை ஏற்பதில் முனைப்பு காட்டியதைப் போல் அதைப் பின்பற்றுவதிலும், அதன் கொள்கை கோட்பாடுகளைப் பற்றிய நம்பிக்கையிலும் மிக உறுதியாக இருக்க வேண்டும். இன்பங்கள் வரும் போது ஏற்றுக் கொள்வதைப் போல் துன்பங்கள் வரும் போது அதையும் ஏற்று, பொறுமையுடன் இருப்பதும் இறைவனைப் பற்றி தவறாக எண்ணாமல் இருப்பதும் அவசியமாகும்.

வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகள் நம் நம்பிக்கை அசைத்துப் பார்க்கவரும், அப்போது நமது நம்பிக்கை உறுதி பெற வேண்டும். பிரச்சனைகள் தொடர்ந்து வருதால் இறைவனை மறந்து மார்க்கத்தின் சட்டங்களை பின்பற்றாமல் வழி தவறி விடக் கூடாது.

அல்லாஹ் சிலருக்கு குழந்தை தராமல் சோதனை செய்யும் போது படைத்தவனிடம் கேட்காமல் தர்ஹாக்களுக்குச் சென்று இணை வைத்தல் என்ற பெரும் பாவத்தில் சிக்கி விடுகிறோம். இது படைத்தவனின் மீது கொண்டுள்ள உறுதியின்மையைக் காட்டுகிறது. இவ்வாறு நடந்து கொள்பவர்கள் நிச்சயம் வெற்றியடைய மாட்டார்கள். கொள்கையில் உறுதி தான் வெற்றிக்கு அடிப்படை என்பதைப் பின்வரும் ஹதீஸ் தெளிவு படுத்துகிறது.

உறுதியாக இருங்கள். வெற்றியடைவீர்கள். உங்களுடைய நற்காரியங்களில் சிறந்தது தொழுகையாகும். நம்பிக்கைக் கொண்டவனைத் தவிர வேறு எவரும் உளூவைப் பேண மாட்டார்கள்.

அறிவிப்பாளர்: சவ்பான்
நூல்: அஹ்மத் 21380

## தொழுகையைப் பேணியவர்

ரமலான் மாதம் வந்து விட்டால் பள்ளிவாசல்களில் அலை மோதும் கூட்டத்தைக் காணலாம். தொழுவதற்கு இடப் பற்றாக்குறை ஏற்படும் அளவுக்கு மக்கள் தொழுவதற்கு ஆர்வப்பட்டு பள்ளியை நோக்கி விரைந்து வருவார்கள். ஆனால் ரமலான் முடிந்து விட்டால் பள்ளிவாசல் வெறிச்சோடிக் கிடக்கும்.

தொழுகையை ரமலானில் மட்டும் நிறைவேற்றினால் போதும் என்று நினைப்பதே இதற்குக் காரணம். காலையில் எழுந்து வேலைக்குச் செல்பவர்கள் இரவு வீடு திரும்புவார்கள். 24 மணி நேரத்தையும் இந்த அற்ப உலகத்திற்காக செலவிடுவார்கள். ஆனால் படைத்த இறைவனை வணங்குவதற்காக சிறிது நேரம் கூட ஒதுக்க மனம் வருதில்லை.

ஆண்களுக்கு ஜமாஅத் தொழுகையை இஸ்லாம் வலியுறுத்திச் சொன்னதைப் போல் பெண்களுக்கு வலியுறுத்திச் சொல்லவில்லை. அவர்கள் வீட்டில் இருந்து கொண்டே தொழ அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த சலுகையைப் பெற்றும் பலப் பெண்கள் தொழுவதில்லை. வீடுகளில் தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டு காலத்தை விரையமாக்கு கிறார்கள். இல்லையென்றால் தெருக்களில் அமர்ந்து கொண்டு வீண் பேச்சுக்களை பேசுகிறார்கள். பாங்கு சொல்லப்பட்டால் பாங்கிற்கு மரியாதை செய்வதாக எண்ணிக் கொண்டு தலையில் துணியைப் போடுவார்கள். ஆனால் அவர்கள் பாங்கிற்கு செய்ய வேண்டிய உண்மையான மரியாதை தொழுகையை நிறைவேற்றுதல் என்பதை விளங்குவதில்லை.

சிலர் ஒரு நாளைக்கு நான்கு வேளை தொழுவார்கள். ஆனால் ஃபஜ்ர் தொழுகைக்கு வராமல் உறங்கி விடுவார்கள். ஐந்து நேரம் தொழுபவர்கள் கூட அதற்குரிய நேரத்தில் முறையாக நிறை வேற்றுவதில்லை. காலம் தவறாமல் எந்தத் தொழுகையையும் விடாமல் தொழுபவர்கள் சமுதாயத்தில் மிகக் குறைவாகவே இருக்கிறார்கள். மறுமையில் அல்லாஹ் முதன் முதலில் இந்தத் தொழுகையைப் பற்றித் தான் நம்மிடம் விசாரிப்பான். தொழுகையில் எந்தக் குறையும் வைக்காமல் நாம் நிறைவேற்றி இருந்தால் அதன் பின் வரும் கேள்விகளுக்குச் சரியான பதிலை அவர் கூறி விட முடியும். முதல் கேள்வியிலேயே நாம் தோற்று விட்டால் அதன் பின் வரும் கேள்விகளுக்குச் சரியான பதிலை கூற முடியாமல் நஷ்டமடைந்த வர்களாக ஆகி விடுவோம்.

அடியானிடம் முதலில் விசாரிக்கப்படுவது அவனது தொழுகையைப் பற்றித் தான். அத்தொழுகை சரியாக அமைந்திருந் தால் அவன் வெற்றி பெறுவான். ஈடேற்றம் அடைந்து விடுவான். அது சரியாக இல்லாவிட்டால் அவன் நஷ்டமடைந்து விடுவான். கைசேதப்படுவான்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி)
நூல்: நஸயீ 461, திர்மிதீ 378

**இன்ஷா அல்லாஹ் தொடரும்...**

---

## குர்ஆன், ஹதிஸ் ஒளியில் வாரம் ஒரு துஆ

## வீட்டிலிருந்து வெளியே செல்லும் போது

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீட்டை விட்டு வெளியே செல்லும் போது கீழ்க்காணும் துஆவைக் கூறுவார்கள்.

ஆதாரம்: நஸயீ 5391, 5444

**بِسْمِ اللَّهِ رَبِّ أَعُوذُ بِكَ مِنْ أَنْ أَزِلَّ أَوْ أَضِلَّ أَوْ أَظْلِمَ أَوْ أُظْلَمَ أَوْ أَجْهَلَ أَوْ يُجْهَلَ عَلَيَّ**

பி(இ)ஸ்மில்லாஹி ரப்பி(இ) அவூது பி(இ)(க்)க மின் அன் அஸில்ல அவ் அளில்ல அவ் அள்ளம அவ் உள்லம அவ் அஜ்ஹல அவ் யுஜ்ஹல அலய்ய

இதன் பொருள்:

அல்லாஹ்வின் பெயரால் (வெளியேறுகிறேன்.) என் இறைவா! நான் சறுகி விடாமலும், வழி தவறி விடாமலும், அநீதி இழைக்காமலும், அநீதி இழைக்கப்படாமலும், மூடனாகாமலும், (பிறரை) மூடராக்காமலும் இருக்க உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

**மறுமை வெற்றிக்கு வழிகாட்ட குர்ஆன், ஹதீஸ் ஒளியில் பல்வேறு தலைப்புகளில் மார்க்கப் புத்தகங்கள் & V C D க்கள் உள்ளன. இடம் :அபுதாபி தவ்ஹீத் ஜமாஅத் மார்கஸ். எலக்ட்ரா ரோடு. அல் இப்ராஹீமி ரெஸ்டாரன்ட் பில்டிங் அறை எண் 1303**

---

தவ்ஹீத் ஜமாஅத் (TNTJ) அபுதாபி

*எலக்ட்ரா ரோடு. அல் இப்ராஹீமி ரெஸ்டாரன்ட் பில்டிங்*
*அறை எண் :1303*

Visit:www.onlinepj.com,www.tntj.net